# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2078 - 2018 ජුනි මස 29 වැනි සිකුරාදා - 2018.06.29

*2078 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 114 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சட்டமூலம் 2018, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூன் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2018, யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

*பின்னிணைப்பு-0 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) உபபிரிவுக்கேற்ப 1995 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11 ஆந் திகதி இராஜாங்கனை யாய 06 இல் வசிக்கும் அதிகாரி முதியன்சகே குடாபண்டா நவரத்ன என்பவருக்கு அனு/இரா/பிர/835 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட அனுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1996.05.17 ஆந் திகதி 2822 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் /இருக்கும் பின்னுரிமை வாரிசு உரிமை கோர விரும்பவில்லை, என பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2018.07.22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளின் பிரகாரம் நில அளவைநாயகம். என்பவரினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ. 433 ஆம் இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட 02 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 178 எனக் காட்டப்பட்டுள்ளதும். அனுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட இராஜாங்கனை பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த எப்பாவள கோரளையிலுள்ள 449 கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த. தம்புள்ளேகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 ஏக்கர் (ஒன்று) 03 றூட் (மூன்று) 39 பேர்ச்சஸ் (முப்பத்தொன்பது) விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி இதன் எல்லைகள் வருமாறு :-

வடக்கு : இலக்கம் 179 ஒதுக்கீட்டு நிலம்;
கிழக்கு : இலக்கம் 177 மேட்டு நிலம்;
தெற்கு : இலக்கம் 241 காணி;
மேற்கு : இலக்கம் 182 காணி.

பீ.கே. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
இராஜாங்கனை.

2018, மாச்சு 28.

6 - 970/1

*இணைப்பு 09*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வட மத்திய மாகாண சபையின் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பதவிய பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் கோமர முதியன்சேலாகா கபுரு பண்டாகே ரஞ்சித் பிரியதர்சன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1987.07.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/பர/18624 ஆம் இலக்க அளிப்புப்பத்திரம் உரிமையாளரான அபேசிங்கபுர - 349 எனும் முகவரியில் வசிக்கும் கொழும்ப மோதற பரண படபெந்திகே தோமஸ் பெரேரா என்பவருக்கு கையளிக்கப்பட்டு அனுராதபுரம் மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் 260 ஆம் இலக்கத்தின்கீழ் 1995.02.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணை யில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.07.22 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

அனுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவின் உதுரு குருளு பற்றில், கோறளையிலுள்ள 3 பீ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அபேசிங்கபுர-பதவிய சீ யாய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு வெளிக்களத் தாளில் ரீ.பீ.பீ.20 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் இரேகை வரைதலில் 5093 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 01 ஏக்கர் , 03 றூட், 03 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 5086, 5084, 5094;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 5108, 5094;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 5092, 5108;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 5086, 5087, 5092

ஜீ. எம். கே. ஆர். பிரியதர்ஷன,
பிரதேச செயலாளர்,
பதவிய.

2018, மாச்சு 28.

6 - 970/2

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொபேகனே பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின், கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1993 ஆந் ஆண்டு வழங்கப்பட்டுள்ள எல். எஸ்/ கு 344 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான 89/2 ஸ்ரீ தர்மாதார மாவத்தை, இரத்மலானை எனும் முகவரியில் வசிக்கும் ஹிலேரியன் நிகுலஸ் ஒலிவர் ப்ளேஸிடஸ் பிரனாந்து என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் டி 249/3709/93 ஆம் இலக்கத்தின் கீழ் 1993.10.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.07.16 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் கொபேகனே பிரதேச செயலாளர் பிரிவின் தேவமதிஹத் பற்றில்/கோறளையிலுள்ள 1323 கஹடகஸ்வெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கஹடகஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகம் என்பவரால் தயாரிக்கப்பட்டு 1593 இன் 4 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட இரேகை வரைதலில் 69 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் அளவில் 14 ஏக்கர், 02 றூட், 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :-

வடக்கு : காணித் துண்டு இல. 40 உம் காணித் துண்டு இல. 70 உம் ;
கிழக்கு : காணித் துண்டு இல. 40 ;
தெற்கு : காணித் துண்டு இல. 70 உம் தங்வில கிராம எல்லையும்;
மேற்கு : காணித் துண்டு இல. 40;

என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர்,
கொபேகனே.

2018, மே 09.

6 - 971